DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No. CC : 200/2017

Prosecution P.W- 1

Deposition of witness for {

Name : Subramaniya Prabhakaran

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2018

மு.வி.

நான் பாவூர்சத்திரம் குடியிருந்து வருகிறேன். நான் பூலான்குளம் டாஸ்மார்க் கடையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 1ம் எதிரி என் வீட்டு வேலைகளை செய்பவர். 2ம் எதிரி 1ம் எதிரிக்கு பழக்கமானவர். கடந்த 15.04.2017ம் தேதி இரவு பூலான்குளம் டாஸ்மார்க் கடையை அடைத்து விட்டு அன்றை உள்ள 6 லட்சம் உள்ள வருமானத்தை மறுநாள் காலையில் வங்கியில் கட்டுவதற்காக என் வீட்டில் பீரோவில் வைத்திருந்தேன். வழக்கம் போல் தூங்கிவிட்டேன். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் பணத்தை வங்கியில் செலுத்த முடியவில்லை. பின்பு மறுநாள் மதியம் 02.00 மணிக்கு நான் வேலைக்கு சென்றேன். நான் வீட்டை பூட்டிவிட்டு பாத்ரூம்மில் ஒரு கூடையில் சாவியை வைத்துவிட்டு டாஸ்மார்க் கடைக்கு சென்றுவிட்டேன். அப்போது 1ம் எதிரி பிரேமா வழக்கமாக மாலை 04.00 மணிக்கு என் வீட்டு வேலைகளை செய்ய வருவார். நான் அன்று வழக்கம் போல் இரவு 10.30 மணிக்கு வீட்டுக்கு வந்தேன். வரும் போது என் வீட்டு கதவு திறந்து கிடந்தது. நான் உடனே பீரோவை போய் பார்த்தேன். அங்கு நான் வைத்த பணம் இல்லை. உடனே பாவூர்சத்திரம் காவல் நிலையம் சென்று புகார் நடவடிக்கை எடுக்க மனு கொடுத்தேன். அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. பின் ஒரு வாரம் கழித்து அந்த பணத்தை காவல் துறையினர் கண்டு பிடித்து கொடுத்தார்கள். பின்னர் களவு போன 5,63,844 ரூபாயை போலிசார் கண்டு பிடித்து கொடுத்தார்கள். அந்த பணத்தை மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள பணம் என்னுடையதுதான். அந்த போட்டோக்கள் சா.பொ.1.(9 எண்ணம் ). சி.டி. சா.பொ.2. அந்த

பணத்தையும் நான் என்னுடைய சொந்த பணத்தை 11,100யை ஆதாரமாக செலுத்தி டாஸ்மார்க் அக்கவுண்ட்டில் செலுத்தியுள்ளேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.